# இயல் 7.8 - புள்ளியியல்

பயிற்சி எண் :: 7.8.1.1.D

புள்ளியியல் - முகடு - வரையறையும் உதாரணங்களும்

Statistics - Mode - Definition & Examples

## புள்ளியியல் - முகடு - வரையறையும் உதாரணங்களும்

கொடுக்கப்பட்டுள்ள தரவுகளில் அதிகபட்ச எண்ணிக்கையில் காணப்படும் மதிப்பை **முகடு** எனக் குறிப்பிடுவர்.

இதனை பின்வரும் உதாரணங்களின் மூலம் நன்கு புரிந்து கொள்ள இயலும்.

சிலம்பரசன் ஒரு ஏழாம் வகுப்பு மாணவன். அவனது வகுப்பில் நடைபெற்ற கணித திறன் தேர்வில் அவனது வகுப்பில் உள்ள அனைவரும் 20 -க்கு பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு, 15, 14, 17, 9, 18, 14, 17, 14, 18, 19, 12, 14, 17. இவற்றின் முகடு காண்க.

மதிப்பெண்களின் ஏறுவரிசை : $\overbrace{9}^{①},\ \overbrace{12}^{①},\ \overbrace{14, 14, 14, 14}^{④},\ \overbrace{15}^{①},\ \overbrace{17, 17, 17}^{③},\ \overbrace{18, 18}^{②},\ \overbrace{19}^{①}$

இங்கு, 9, 12, 15, 19 ஆகிய மதிப்பெண்களை தலா ஒவ்வொரு மாணவர்களும், 18 மதிப்பெண்களை இரு மாணவர்களும், 17 மதிப்பெண்களை மூன்று மாணவர்களும் மற்றும் 14 மதிப்பெண்களை நான்கு மாணவர்களும் பெற்றுள்ளனர்.

எனவே, இங்கு அதிகபட்சமாக நிகழ்ந்த தரவு 14 ஆகும்.

∴ கொடுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களின் முகடு **14** ஆகும்.

பின்வரும் தரவுகளின் முகடு காண்க. 2, 4, 6, 5, 1, 5, 6, 4, 5, 7, 4

கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் ஏறுவரிசை : $\overbrace{1}^{①},\ \overbrace{2}^{①},\ \overbrace{4, 4, 4}^{③},\ \overbrace{5, 5, 5}^{③},\ \overbrace{6, 6}^{②},\ \overbrace{7}^{①}$

இங்கு, 4 மற்றும் 5 ஆகிய இரு தரவுகளும் தலா மூன்று முறைகள் வந்துள்ளன. எனவே, இந்த தரவு இரு முகடுகளைக் கொண்டுள்ளது.

∴ கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் முகடுகள் முறையே **4** மற்றும் **5** ஆகும்.

### அதிகமான தரவுகளின் முகடு காணல்

சுடர்மணி கலந்து கொண்ட வினாடிவினா போட்டியில் 20 சுற்றுகளில், ஒவ்வொரு சுற்றிலும் அவன் பெற்ற மதிப்பெண்கள் 2, 5, 1, 2, 3, 3, 4, 2, 1, 1, 2, 4, 5, 0, 0, 3, 5, 2, 2, 3. அவற்றின் முகடு காண்க.

அதிகமான தரவுகளின் முகடு காண **நேர்க்கோட்டுக் குறிகளைப்** பயன்படுத்தினால் எளிதாக இருக்கும்.

| மதிப்பெண்கள் | நேர்க்கோட்டுக் குறிகள் | நிகழ்வெண் |
|---|---|---|
| 0 | \|\| | 2 |
| 1 | \|\|\| | 3 |
| 2 | ~~\|\|\|\|~~ \| | 6 |
| 3 | \|\|\|\| | 4 |
| 4 | \|\| | 2 |
| 5 | \|\|\| | 3 |

∴ சுடர்மணி பெற்ற மதிப்பெண்களின் முகடு **2** ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/gGwA7ZB8UOc


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 28th November, 2022 :: 07:42 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.